**திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (மானியம்) - 2021**

திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (மானியம்) 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2018 மே 11 ஆந் திகதிய 9193 எஸ்ஆர்ஜ (ஈஎவ்) ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் 4.02(அ) பிரிவின் IV ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

மானிய உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சாகவிருந்த தற்போதைய கல்வி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் நிகழ்ச்சித்திட்டத்தின் பத்து முகவர்கள் ஊடாக அமுல்ப்படுத்தப்படுகின்றன. (அ) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி பயிற்சி துறையில் தனியார் துறை ஈடுபாட்டை வலுப்படுத்துதல், (ஆ) பெண்களை முன்னிறுத்தி சுயதொழில் தொழில்முனைவோர் அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை முன்னேற்றுதல், (இ) பாரம்பரியமற்ற பகுதிகளிற்கு பெண்களை கவர்வதற்கு இலக்கிடப்பட்ட ஊக்குவிப்புக்கள், வழிகாட்டல் மற்றும் வேலைசெய்யும் சுற்றாடல் ப்பயிற்சியை வழங்குதல் மற்றும் (ஈ) தனியார் துறையில் பாலினம் உள்ளடங்கிய ஆட்சேர்ப்பு மற்றும் பணிச் சூழல் நடைமுறைகளை உறுதிப்படுத்துதல் என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களாகும். மானிய உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 534 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 3 மில்லியனாகக் காணப்பட்டதுடன் வறுமை குறைப்பிற்கான ஜப்பான் நிதியத்தால் (ஜேஎவ்பிஆர்) மானியமொன்றாக நிதியளிக்கப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டதுடன் செயற்திட்ட நிதியிடல் நோக்கங்களிற்காக ஏடிபீ ஆல் இது நிர்வகிக்கப்படுகின்றது. நிகழ்ச்சித்திட்டம் அதன் செயற்பாடுகளை 2018 நவம்பர் 16 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2023 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, நிகழ்ச்சித்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதன் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு விடயங்கள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா 52,558 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொர் 266,245 ஆக காணப்பட்டது. எனினும், நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பணம் மீளப்பெறல் விண்ணப்பங்களின் பிரகாரம் ஆண்டிற்கான மொத்தச் செலவினம் ரூபா 57,010 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 291,099.19 ஆகும். எனவே, நடைமுறை வேலை கணக்கு ரூபா 4,452 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | 4,452 | உண்மை. பணம் மீளப்பெறல் விண்ணப்பங்களின் மொத்த பெறுமதிக்கும் 2021 ஆம் ஆண்டில் இறுதிக் கணக்குகள் தொடர்பான மொத்தச் செலவினத்திற்கும் இடையே வேறுபாடு இருந்தது. | தவறை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சால் வெளியிடப்பட்ட 2007 ஆகஸ்ட் 07 ஆம் திகதிய எம்ஓஎவ்பி/ஈஆர்டி/2007/2 ஆம் இலக்க சுற்றறிக்கை | 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2022 மார்ச் 31 இல் அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2022 யூலை 12 இலேயே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. | இணங்கப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட அமுல்ப்படுத்தல் பங்காளரின் நிதி முகாமைத்துவ சிக்கல்கள் காரணமாக ஏற்றுக்கொள்ள முடியாத தாமதம் ஏற்பட்டது. | மானியத்தின் நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2.3 பணம் மீளப்பெறல் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதில் தாமதங்கள்

| இல. | மீளப்பெறல் விண்ணப்ப இல. | காலப்பகுதி | சமர்ப்பித்தல் திகதி | தாமதமான காலப்பகுதி (மாதங்கள்) | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| (அ) | 05 | 2020 மார்ச் - 2020 யூலை | 2021 பெப்ரவரி 17 | 4 - 9 | இந்த தாமதத்தை அமைச்சு மற்றும் ADB இனங்கண்டு அமுல்ப்படுத்தும் பங்காளரிற்கு அறிவுறுத்தியது. இது 2022 இல் சீர்செய்யப்பட்டது. | பணம் மீளப்பெறுவதற்கான விண்ணப்பங்களை உரிய நேரத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 06 | 2020 ஆகஸ்ட் - 2020 திசெம்பர் | 2021 ஏப்ரல் 20 | 2 - 6 | | |
| (இ) | 07 | 2021 சனவரி – 2021 பெப்ரவரி | 2021 யூலை 22 | 3 - 4 | | |
| (ஈ) | 08 | 2021 மார்ச் - 2021 யூன் | 2021 ஆகஸ்ட் 25 | 1 - 3 | | |
| (உ) | 10 | 2021 ஆகஸ்ட் | 2021 நவம்பர் 19 | 1 | | |
| (ஊ) | 11 | 2021 செப்தெம்பர் | 2021 திசெம்பர் 14 | 1 | | |
| (எ) | 12 | 2021 நவம்பர் | 2022 மார்ச் 21 | 2 | | |
| (ஏ) | 13 | 2021 திசெம்பர் | 2022 மார்ச் 24 | 1 | | |

3. பௌதீக செயலாற்றல்

3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டின் விரிவான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் அடைந்துகொள்ளப்பட வேண்டிய 24 முக்கிய இலக்குப் பணிகள் மற்றும் 110 துணை இலக்குப் பணிகளை செயற்திட்டம் இனங்கண்டுள்ளது. எனினும், இந்த இலக்குகளில், 83 துணை இலக்குகள் விரும்பிய இலக்குகளை அடைந்திருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் இந்த செயற்திட்டம் குறிப்பிடத்தக்க அளவிலான இலக்குகளை எட்டியுள்ளது. 2021 ஆம் ஆண்டில் சில செயல்பாடுகள் தொடப்படாமல் இருப்பதற்கு சில காரணங்கள் உள்ளன. | நிகழ்ச்சித்திட்டத்தின் எதிர்பார்க்கப்படும் இலக்குகளை அடைந்துகொள்வதற்கு முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2021 விபரமான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்பாடு 2.6.2 இன் கீழ் சர்வதேச சந்தைகளுடன் பெண் தொழில்முனைவோரை இணைப்பதற்கு எந்த நிகழ்ச்சித்திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்தச் செயற்பாட்டு செயன்முறை 2021 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இதுபோன்ற செயற்பாட்டிற்கு நியாயமான காலப்பகுதி தேவைப்படுவதாலும், செயற்திட்டத் திட்டமாக, 2022 ஆம் ஆண்டில் இது அடைந்துகொள்ளப்பட்டது. | எதிர்பார்த்த இலக்கை அடைந்துகொள்வதற்கு முகாமைத்துவம் தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டும். |
| (இ) | நிகழ்ச்சித்திட்டத்தின் 24 செயற்பாடுகளில் ஐ.அ.டொலர் 822,255.59 தொகை ஒதுக்கப்பட்ட 07 செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பின்வரும் காரணங்களால் சில செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட வேண்டியிருந்தது<br>i. நாட்டில் நிலவிய கொவிட்டின் மோசமான நிலைமை<br>ii. பயணம் செய்வதற்கும் ஒன்றுகூடுவதற்கும் அரசாங்க கட்டுப்பாடு<br>iii. பொருளாதாரம் மற்றும் வணிகம் வீழ்ச்சியடைந்தமை மற்றும் புதிய ஆட்சேர்ப்புக்கள் மற்றும் வணிக நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டமை. | எதிர்பார்த்த இலக்கை அடைந்துகொள்வதற்கு முகாமைத்துவம் தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டும். |
| (ஈ) | நிகழச்சித்திட்டத்தின் காலம் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த போதிலும், அதன் 14 பணிகளைச் செயற்படுத்துவதில் முன்னேற்றம் 2 சதவீதம் முதல் 50 சதவீதம் | சில காரணங்களால் சில நடவடிக்கைகள் மந்தமாக இருந்தன. ஆனால் பெரும்பாலான திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு DMF | நிகழ்ச்சித்திட்டத்தின் எதிர்பார்க்கப்படும் இலக்குகளை செயற்திட்ட காலத்திற்குள் திட்டமிட்டு செயற்படுத்த |

| | | | |
|---|---|---|---|
| | வரை குறைந்த அளவிலேயே இருந்தது. | இலக்குகளின் பிரகாரம் வழங்கக்கூடியவைகளை அடைந்தன. பரிமாற்ற வீதத்தில் ஏற்ற இறக்கங்கள் காரணமாக, செலவிடப்பட்ட தொகையின் பெறுமதி கணிசமாகக் குறைக்கப்பட்டது. | முகாமைத்துவம் தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டும். |
| (உ) | 1300 இற்கும் மேற்பட்ட புதிய மாணவிகள் பாரம்பரியமற்ற மற்றும் வளர்ந்து வரும் துறைகளில் பயிற்சி பெற்று பணிக்கமர்த்தப்பட வேண்டிய போதிலும் 2021 ஆம் ஆண்டின் இறுதிக்குள் 305 மாணவர்களுக்கு மாத்திரமே அதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. | அரசாங்கத்தின் தடையால், பயிற்சிகளை நடாத்துவதில் தாமதம் ஏற்பட்டது. ஆனால் இந்த இலக்குகள் 2022 ஆம் ஆண்டில் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டன. | நிகழ்ச்சித்திட்டத்தின் எதிர்பார்க்கப்படும் இலக்குகளை அடைந்துகொள்வதற்கு பயிற்சிகளை திட்டமிட்டு அமுல்ப்படுத்துவதற்கு முகாமைத்துவம் தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டும். |
| (ஊ) | 1000 இற்கும் மேற்பட்ட மாணவிகளுக்கு வழிகாட்டல் மற்றும் தொழில் ஆலோசனை வழங்குவதே குறிக்கோளாக உள்ள போதிலும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 180 மாணவர்களிற்கு மாத்திரமே உதவப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் 08 மாதங்களாக பாடசாலைகள் மற்றும் அனைத்து கல்வி நிறுவனங்களும் மூடப்பட்டன, இந்த செயற்பாடு இடைநிறுத்தப்பட்டது. | எதிர்பார்த்த இலக்கை அடைந்துகொள்வதற்கு முகாமைத்துவம் தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டும். |
| (எ) | 2019 மற்றும் 2020 ஆகிய இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது 2021 ஆம் ஆண்டில் பயிற்சி கற்கைநெறிகளுக்கான மாணவர் சேர்க்கையில் குறிப்பிடத்தக்க குறைவு அவதானிக்கப்பட்டது, 2019 இல் 137 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்ட போதிலும் 2021 ஆம் ஆண்டில் 78 மாணவர்கள் மாத்திரமே சேர்த்துக் கொள்ளப்பட்டனர். மேலும் 2021 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாவட்டத்திற்கான மாணவர் சேர்க்கையும் மிகவும் குறைவாக இருந்ததுடன் இது 0 முதல் 20 வரையான வீச்சில் இருந்தது. | ஆம், அனைத்து TVET நிறுவனங்களும் பல மாதங்கள் மூடப்பட்டு மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கு பொருத்தமில்லாத ஒன்லைன் அமர்வுகளை நடாத்தியதால் இந்த நிலைமை ஏற்பட்டது. | எதிர்பார்த்த இலக்கை அடைந்துகொள்வதற்கு முகாமைத்துவம் தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டும். |
| (ஏ) | மேல் மாகாணத்தின் மூன்று மாவட்டங்களும் 2019 ஆம் ஆண்டு வேலை சார்ந்த பயிற்சிக்கு மாணவர்களை சேர்த்துக் கொள்ளவில்லை மேலும் 2020 ஆம் ஆண்டு | மேல் மாகாணம் 2020 முதல் செயற்திட்டத்திற்காக கருத்தில் கொள்ளப்பட்டது. | எதிர்பார்த்த இலக்கை அடைந்துகொள்வதற்கு முகாமைத்துவம் தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கம்பஹா மாவட்டத்தில் இருந்து இரண்டு மாணவர்கள் மாத்திரமே சேர்த்துக்கொள்ளப்பட்டதுடன் 2021 ஆம் ஆண்டு மூன்று மாவட்டங்களுக்கும் 22 மாணவர்கள் மாத்திரமே சேர்த்துக்கொள்ளப்பட்டனர். | | |
| (ஐ) | மானிய நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஐ.அ.டொலர் 3,000,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐ.அ.டொலர் 535,266.76 அல்லது 18 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டது. | காரணங்கள் கீழ்வருமாறு உள்ளன.<br>(அ) கொவிட் காரணமாக நாடு பூட்டப்பட்டுள்ளது<br>(ஆ) பயணம் செய்வதற்கும் ஒன்றுகூடுவதற்குமான அரசாங்க கட்டுப்பாடு<br>(இ) டொலர் பெறுமதியுடன் ஒப்பிடும் போது ரூபா பெறுமதி குறைவடைதல்<br>(ஈ) கொவிட் காரணமாக TVET நிறுவனங்களை மூடுதல்<br>(உ) பொருளாதார சரிவு மற்றும் வணிகம் குறைக்கப்பட்டமை மற்றும் ஆட்சேர்ப்புக்கள் இடைநிறுத்தப்பட்டமை. | எதிர்பார்த்த இலக்குகளை அடைந்துகொள்வதற்கு முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (ஒ) | குறைந்தபட்சம் 500 மூன்றாம் நிலை தொழிற்கல்வி பயிற்சி பட்டதாரிகள் தொழில்துறை சபையின் தலையீடுகள் மூலம் தனியார் துறையில் வேலை வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கு இலக்கிடப்பட்டுள்ள போதிலும் 2021 திசெம்பர் 31 வரையிலும் அந்த இலக்குகள் முழுமையாக அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நாட்டின் பொருளாதார பின்னடைவு காரணமாக, பெரும்பாலான தனியார் துறை நிறுவனங்கள் தங்கள் வணிகங்களை நிராகரித்து புதிய ஆட்சேர்ப்புக்களை இடைநிறுத்தியுள்ளன. | எதிர்பார்த்த இலக்குகளை அடைந்துகொள்வதற்கு முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஆலோசனை நிறுவனத்துடன் ஆசிய அபிவிருத்தி வங்கியில் செய்து கொள்ளப்பட்ட மானிய உடன்படிக்கையின் பிரகாரம் ADB ஆல் ஆலோசனைக்காக செலுத்தப்பட்ட பெறுமதி நேரடியாக ஆலோசனை நிறுவனத்தால் பெறப்படும். எனினும், 2021 திசெம்பர் 31 இல் பெறப்பட்ட ஐ.அ.டொலர் 249,239.05 | ஆலோசனை நிறுவனம் மேற்கொண்ட செலவினங்களை ADB மீள்நிரப்பு செய்ததுடன் ஆலோசனை நிறுவனத்திற்கான எந்த முற்பணக் கொடுப்பனவும் காணப்படவில்லை. குறிப்பிடப்பட்ட மொத்தத் தொகைக்கான அனைத்து மீள்நிரப்பல் தொகைகளினதும் | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திடம் இருந்து திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகையான நேரடி பெறுவனவுகளுக்கு பொது திறைசேரி கணக்கீடு செய்துள்ளதா என்பதற்கு கணக்காய்விற்கு எந்த உறுதிப்படுத்தலும் கிடைக்கவில்லை. | மீளப்பெறல் விண்ணப்பத்தின் அனைத்து பிரதிகளும் கணக்காய்வாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக ஒதுக்கப்பட்ட செலவினத்தில், ஐ.அ.டொலர் 217,765.16 அல்லது ஒதுக்கப்பட்ட தொகையில் 9 சதவீதம் அதற்காக செலவிடப்பட்டிருந்தது. மேலும், ஆலோசனை நிறுவன பதவியணியினரிற்கு செலுத்துவதற்கு ஒதுக்கப்பட்ட தொகையான ஐ.அ.டொலர் 317,501.60 அல்லது 72 சதவீத ஒதுக்கப்பட்ட தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கத்தை அமுல்ப்படுத்துவதற்கு வேலை செய்யாமல் நிறுவனம் அதனது பதவியணியினரிற்கு செலுத்துவதற்காக பணத்தை ஒதுக்கியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | காரணங்கள் கீழ்வருமாறு உள்ளன.<br>i. நாணய விகிதத்தின் வேறுபாடு.<br>ii. ஆலோசனைக் கட்டணம் ஐக்கிய அமெரிக்க டொலரில் செலுத்தப்படும். எனவே, மாற்று விகித வேறுபாடு ஆலோசனைக் கட்டணத்தில் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை.<br>iii. மானியங்களை வழங்குவதற்கும், பயிற்சிகளை நடாத்துவதற்கும், நிதியை செலவிடுவதற்கும் முன்னர் செயற்திட்டக் குழு பல ஆரம்ப வேலைகளையும் சுற்று நிலை வேலைகளையும் கொண்டுள்ளது. | எதிர்பார்த்த இலக்குகளை அடைந்துகொள்வதற்கு முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவத்துடன் தொடர்புடைய விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| நிகழ்ச்சித்திட்ட அமுலாக்கல் ஆவணத்தின் பிரகாரம் திறன் துறை அபிவிருத்தி (மானியம்) நிகழ்ச்சித்திட்டத்திற்காக 03 பகுதி ஒருங்கிணைப்பாளர் பதவிகள் ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டியிருந்தன, ஆனால் அதற்கு முரணாக 05 ஒருங்கிணைப்பாளர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர். | தொடக்கம் முதல் இன்று வரை மூன்று பகுதி ஒருங்கிணைப்பாளர்கள் மாத்திரமே செயற்திட்டத்தின் கீழ் பணியாற்றி வருகின்றனர். மூன்று பகுதி ஒருங்கிணைப்பாளர்கள் வடக்கு (1), வடமேற்கு (1) ஊவா மற்றும் சப்ரகமுவ (1) ஆகியவற்றிற்கு ஒதுக்கப்பட்டுள்ளனர். அதைத் தவிர, ஒருங்கிணைப்பாளர்கள் எவரும் காணப்படவில்லை. | நிகழ்ச்சித்திட்ட அமுலாக்கல் ஆவணத்தின் பிரகாரம் உத்தியோகத்தர்களை பணிக்கமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |